2. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா எண் 35, திரு. எம். சக்திவேல் முருகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

35–

தொழில் நுட்பக் கல்லூரி

***1381–திரு. எம். சக்திவேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தொகுதியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. எம். சக்திவேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் எங்கள் பகுதிக்கு வருகின்ற நேரத்தில் எல்லாம், நீர் வளம் மிக்க, அம்பாள்கள் கூடியிருக்கிற அம்பாசமுத்திரத்தை 'அம்மா சமுத்திரம்' ஆக்குங்கள் என்று நீங்கள் அடிக்கடி கூறுவீர்கள். அதைப்போல, எங்கள் அம்பாசமுத்திரம் தொகுதி மக்கள் நமது அம்மா முதல்வராக வேண்டும், மீண்டும் அம்மாவுடைய ஆட்சி வரவேண்டுமென்பதற்காக, அம்பாசமுத்திரத்தை 'அம்மா சமுத்திரமாக' ஆக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற பதில் அதிர்ச்சியை அளிக்கக்கூடியதாக இல்லை. காரணம், இந்த ஆண்டின் நிதிநிலை. அப்படியிருந்தாலும் எங்கள் தொகுதியில் 10 மேல்நிலைப் பள்ளிகளும், 10 உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. சுமார் 3000 முதல் 4000 மாணவிகள் வருடம்தோறும் மேல் படிப்புக்காகச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எங்கள்

2001 செப்டம்பர் 3]

மாவட்டத்தில் அரசு பாலிடெக்னிக் ஒன்றுகூட இல்லை. தனியார் பாலிடெக்னிக்குகள்தான் இருக்கின்றன. இருந்தாலும், அப்படியே தனியார் பாலிடெக்னிக்கிற்கு நாங்கள் செல்ல வேண்டுமென்றாலும் சுமார் 40 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் என்னுடைய முதல் கேள்விக்கே 'இல்லை' என்ற பதிலை இல்லாமல் ஆக்கும் வகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டிலாவது அம்பாசமுத்திரம் தொகுதியில் ஓர் அரசு பாலிடெக்னிக் அமைப்பார்கள் என்று இதய தெய்வம் அம்மா அவர்களது ஆட்சியில் மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கிறேன். எங்கள் அம்பாசமுத்திரம் தொகுதிக்கு ஒரு நல்ல பதிலைத் தருவார் என்று பணிவோடு எதிர்பார்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவர் தொகுதி.

முற்பகல் 10–05

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினருடைய ஆர்வமும், எண்ணமும் பாராட்டத்தக்கதாகும். காரணம், வருகின்ற 10–வது ஐந்தாண்டுத் திட்டம்கூட இந்தியாவிலேயே அதிகமான என்ஜினியரிங் வல்லுநர்களைப் பெறுவதற்காகத்தான் வகுக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அதில் சுமார் 1660 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தத் துறையாக இருந்தாலும் சரி, சரித்திரத்தைப் படைக்கும் ஒரு மாவட்டமாகும். கல்வித் துறையிலே பல்வேறு அறிஞர்களை உருவாக்கியதும், பல விஞ்ஞானிகளை உருவாக்கியதும் திருநெல்வேலி மாவட்டமாகும். ஆகவே அவர் சொன்னதுபோல் அம்பாசமுத்திரமும் அதற்குப் பெயர் போனதுதான். பெரிய, பெரிய தொழில் வல்லுநர்களும், பெரிய தொழில்களை நடத்தும் தொழில் அதிபர்களும் உருவாக்கப்பட்டது அம்பாசமுத்திரத்தில்தான் ஆகும். ஆகவே அந்த மாவட்டத்தில், குறிப்பாக, அந்தப் பகுதிக்கு இத்தகைய பாலிடெக்னிக்குகளைக் கொண்டுவருவதில் அரசுக்கும் ஆர்வமாகத்தான் இருக்கிறது. இருப்பினும், அவரே அவருடைய பதிலில் சொன்னதுபோல், நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்போது அரசு சந்தித்து வரும் நிதிநிலை நெருக்கடியின்

காரணமாக, இந்த ஆண்டில் கிடையாது. அடுத்த ஆண்டில் வேண்டுமென்றால் பரிசீலனை செய்வோம். அதுவும் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 36, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.*

36 –

பயிற்சி

***2730–திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வந்தவாசி தொகுதியில் பனைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்க பொதுமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) பனைப் பொருள் வாரியக் கிளை மற்றும் பனைப் பொருள் உற்பத்திப் பயிற்சி மையம் வந்தவாசியில் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் அந்த நாட்டிலே இருக்கக்கூடிய மூன்று அம்சங்களை, கூறுகளைப் பொறுத்து அமைகிறது என்பது இன்றைக்கு உலக அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு செய்தி. அது என்னவென்று சொன்னால், நல்ல தரம் வாய்ந்த சாலைகள், தொடர்ந்து தடையின்றிக் கிடைக்கின்ற மின்சாரம், அந்தச் சாலையையும், மின்சாரத்தையும் பயன்படுத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நல்ல நீர்வளம், இவை மூன்றும் இருக்கிற பட்சத்திலே எந்த நாடாக இருந்தாலும் அது தொழில் துறையிலே வளரும் என்பது இன்றைக்கு உலக அளவிலே ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிற ஒரு செய்தி. ஆனால் என்னுடைய வந்தவாசி